**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணப்பட்டன என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு தொடர்பான நிலை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிசார் கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 01 ஆந் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளத் திருத்தஞ் செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் 2011 செப்டெம்பர் 23 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழேயுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆகஸ்ட் 06 ஆந் திகதியன்று இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,722,200 க்கான பெறவேண்டிய வட்டி ரூபா 181,203 கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) முதலீட்டுத் தொகையாகிய ரூபா 14,500,000 க்குப் பெற வேண்டிய வட்டி கணக்கிலிடப்படுகையில் ரூபா 130,500 குறைவாகக் கணக்கிலிடப் பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மின் கட்டணம் ரூபா 91,672 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது காணி ஒன்றை விற்பனை செய்தமையால் பெறப்பட்ட ரூபா 2,343,665 வருமானமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. காணியை விற்பனை செய்தமையால் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டமானது இனங்காணப்பட்டுக் கணக்கில் சீராக்கல் செய்யப்படவில்லை.

### 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்குகளின் பிரகாரமான மீதிகள் மற்றும் பட்டோலை மீதிகள் என்பவற்றைக் கணக்கிணக்கஞ் செய்கையில் 2 கணக்குகளின் கீழ் ரூபா 15,075,113 க்கும் மேற்பட்ட மீதிகள் கணக்குகளில் காணப்பட்டன. பெறுமதி சேர்வரிக் கணக்கின் பிரகாரமான மீதியை விட பட்டோலைப் பிரகாரமான மீதி ரூபா 1,723,668 அதிகரித்துக் காணப்பட்டது. ஏக்கல களஞ்சிய பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரமான கையிருப்புகளது பெறுமதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான ஏக்கலக் களஞ்சியக் கையிருப்புப் பெறுமதியைவிட ரூபா 4,683,185 அதிகரித்துக் காணப்பட்டது.

### 1.2.4 தொங்கற் கணக்கு

பின்வரும் விடயங்கள்அவதானிக்கப்பட்டன.

(அ) இருபத்தொரு ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்த இனங்காணப்படாத ரூபா 211,965 மீதியானது தொங்கற் கணக்கு மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் இனங்காணப்படாத காசுமோசடிக்குரிய ரூபா 111,809 தீர்த்து வைக்கப்படாத தொங்கற் கணக்கு மீதியில் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டின்போது விற்பனை நிறைவேற்றாளர் ஒருவரால் தீர்த்து வைக்கப்படாத ரூபா 5,713,250 தொங்கற் கணக்கு மீதியாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனம் உள்ளூர் ரீதியாக வழங்கிய விளம்பரங்களுக்காக 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 116,247,849 ஆகும். அதில் ரூபா 14,126,933 பத்து ஆண்டுகளுக்கு முன்னரான விளம்பரங்களுக்கு உரியனவாகும். இத்தொகையை அறவிடுவது சந்தேகத்துக்கிடமாயிருந்தது.

(ஆ) வெளிநாட்டு விளம்பரங்கள் சார்பில் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட வேண்டியிருந்த தொகை ரூபா 79,955,611 ஆகும். அதில் ரூபா 1,400,280 தொகையானது 1974 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரான விளம்பரங்களுக்குரியதாகும். 1974-1999 காலப்பகுதிக்குரிய விளம்பரங்களுக்கான தொகை ரூபா 46,269,590 ஆகும். இவற்றை அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) லக்ஹன்ட வானொலியுடன் தொடர்புடைய நடைமுறைக் கணக்கில் ரூபா 12,807,862 வரவு மீதி 2004 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வந்ததுடன் அம்மீதியை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) 2007 ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கொன்று தொடர்பாக 2005 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 350,000 ஐத் திருப்பிப் பெறுவதற்கு 2011 ஜூன் 10 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக் கட்டுப்பாட்டுப் கணக்கு மற்றும் அஞ்சலதிபர் தொடர்பான நடைமுறைக் கணக்கு என்பவற்றில் முறையே ரூபா 109,575, ரூபா 195,700 என வரவு மீதிகள் 2001 தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தன.

(ஊ) தேசிய பாதுகாப்பு நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா15.007,806 தீர்த்து வைக்கப்படாது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது.

**1.6 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

-----------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குரிய எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப் படவில்லை.

(அ) மொத்தப் பெறுமதியான ரூபா 2,207,844 க்குரிய கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மாதாந்தம் ரூபா 25,000 படியாக வழங்கப்படும் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 27 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய செயற்திறன் அறிக்கைகள்.

(இ) தலைமை அலுவலகத்தின் கையிருப்புப் பெறுமதி ரூபா 16,760,407 ஆகும். இதற்குரிய பௌதீக மெய்மையாய்வு முறையாக நடைபெறாமையால் கையிருப்புகளின் பெறுமதி நேரடியாக உறுதிப்படுத்தப்படாதிருந்தது.

**1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

**(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம்**

---------------------------------------------

| | |
|---|---|
| 13(2) ஆம் பிரிவு | 2004 தொடக்கம் 2010 வரையான காலப் பகுதிக்குரிய கணக்காய்வுக் கட்டணமாகிய (வரித் தொகை அடங்கலாக) ரூபா 4,240,047 கொடுப்பனவு செய்யப்படவில்லை |

**(ஆ) நிதிப் பிரமாணங்கள்**

--------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 135 | வருமானச் சேகரிப்பு மற்றும் செலவிடுதல் தொடர்பாகக் குறித்த உத்தியோகத்தர்களுக்கிடையே நிதிசார் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. |
| (ii) | நி.பி 373(1) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி தலைமை அலுவலகத்திற்கு மீளளிப்புச் செய்யப்படவேண்டுமாயினும், அத்தினத்தில் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 607,055 ஆகும். |
| (iii) | நி.பி 880 | காசு அல்லது பொருட்களுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் போதியளவு பிணை வைப்புச் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு நடை பெறாத சந்தர்ப்பங்களும் நிலவின. |
| (iv) | நி.பி 1646 | ஓட்ட அட்டவணை அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை |

**(இ) தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயம்**

--------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 5.2.1 அம் பந்தி | அரசாங்க மனைகளை வாடகைக்கு வழங்கும்போது அரச உத்தியோகத்தர் களினது சம்பளத்தில் $12^{1}/_{2}\%$ வாடகையாக அறவிடப்பட வேண்டுமாயினும் கண்டி அறுப்பலவில் உள்ள இரண்டு மாடி மனைகள் 2 உத்தியோகத்தர்களுக்கு |

| | | |
|---|---|---|
| | | மாதாந்தம் ரூபா 100, ரூபா 125 என வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) 6.14 மற்றும் 7 ஆம் பந்திகள் | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை அரசாங்க உத்தியோகபூர்வ மனைகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், அறுப்பலவில் உள்ள அரச மனைகளில் குடியிருந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| **(ஈ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| | (i) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கம் | ஒவ்வொரு வாகனத்தினதும் எரிபொருள் நுகர்வு 6 மாதங்களுக்கு ஒரு தடவை பரிசீலிக்கப்படவேண்டுமாயினும் அவ்வாறு நடைபெறவில்லை. |
| | (ii) 1999 ஒக்டோபர் 8 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்கத்தின் 1.1.6 மற்றும் 2.2.6 ஆம் பிரிவுகள் | அமைச்சினது செயலாளின் அங்கீகாரமின்றி 3 உத்தியோகத்தர்களுக்கு 3 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைப் பாகங்களும் மென் அணிகளும் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை |
| **(ஊ)** | **2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| | (i) 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2007 டிசெம்பர் | பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட யாக்கத் திட்டத்தின் நாளது வரையாக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | 18 ஆந் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பிரதி மற்றும் வரவு, செலவுத் திட்டத்தின் பிரதிகள் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் குறித்த பிரிவுக்குச் சமர்ப்பிக்கபட வேண்டுமாயினும் அவ்வாறு குறித்த காலத்துக்குள் சமர்ப்பிக்கப் படவில்லை. |
| (ii) | 6.5.3 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டினது வருடாந்த அறிக்கை பாரளுமன்றத்தில் முன் வைக்கப்படவில்லை. |
| (iii) | 8.3.2 ஆம் பிரிவு | ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கும் மிகையூதியத்திற்கும் உரித்தில்லாத கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 10,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2010 டிசெம்பர் 14 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 42. 2 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 839 ஆகும். வருகை தரும் அடிப்படையில் மாதாந்தம் ஊக்குவிப்புப்படி வழங்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் ரூபா 7,376,982 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி ஊக்குவிப்புப்படிகளுக்குப் புறம்பாக சுற்றறிக்கைப் பிரகாரம் வழங்கப்படக்கூடிய மிகையூதியம் ரூபா 7,500 ஆகும். எனினும், ஆகக் கூடுதலாக ரூபா 10,000 எனும் வீதப்படி ரூபா 8,011,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கான திறைசேரியின் அங்கீகாரம் 2011 ஜூன் 06 ஆந் திகதியில் கூட பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

-------------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

**பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் வரிக்கு முன்னரான ரூபா 38,020,869 இலாபத்தை விளைவித்திருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 108,579,655 ஆகும். இதன் மூலம் இலாபத்தில் ரூபா 70,558,786 ஆன பற்றாக்குறை காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் பின்வரும் விடயங்கள் முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

(i) மீண்டுவருஞ் செலவினத்திற்காக ஆளுக்குரிய வேதனத்தின் கீழ் திறைசேரியால் வழங்கப்பட்ட மானியம் ரூபா 150,000,000 ஆகும். இது மொத்த வருமானத்தில் ரூபா 18.21% ஆகும்.

(ii) ஐப்பான் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியத்தின் பெறுமதியை குறிப்பிடுகின்ற செலவு மீதிப் பதிவழிக்கப்பட்டு வருடாந்த வருமானமாகக் கணக்கிலிடப்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 7,276,869 செலவு மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து 1999 முதல் 2010 வரை பெறப்பட்ட மூலதன மானியத்தில் 2010 க்குரிய (இலங்கை கணக்கீட்டு நியமம் 24க்கமைய) ரூபா 86,175,572 என்பன வருமானமாக இனங்காணப்பட்டு மொத்தமாக ரூபா 93,452,441 மீளாய்வாண்டின் செயற்பாடற்ற வருமானமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டமை.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீளத் தயாரிக்கப்பட்டமையால் 2009 ஆம் ஆண்டின் இலாபமாகிய ரூபா 38,283,331 நிதிக்கூற்றுத் தயாரிக்கையில் ரூபா 108,579,655 ஆக அதிகரித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 2.2.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

--------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின்போது அங்கீகரிக்கப்பட்ட வங்கி மேலதிகப்பற்றுத் தொகையாகிய ரூபா 30 மில்லியனை அதிகரித்தவாறு 7 மாதங்களில் அவ்வப்போது ரூபா 337,966 முதல் ரூபா 558,106 வரையிலமைந்த ரூபா 23,659,461 கூட்டுத் தொகையுடைய மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டிருந்தன. இது வழமையாக நடைபெறுவதொன்றாகும். இதனைப் தவிர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடைமுறைகளைத் தயாரிக்காதிருந்தது.

(ஆ) பணிக்கொடைக் கொடுப்பனவிற்கென 2010 டிசெம்பர் 31 வரை ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 154,469,646 முதலீடு செய்யப்படாதிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலும் பிரதேச அலுவலகங்களது 8 நடைமுறைக் கணக்குகளிலும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,309,597 சாதகமான மீதி நிலவியது. வங்கி மேலதிகப் பற்றைப் பெற்ற நடைமுறைக் கணக்கில் அத்தினத்தில் உள்ளவாறு ரூபா 4,171,827 பாதகமான மீதி நிலவியது. முறையான நிதிசார் முகாமைத்துவம் கடைப்பிடிக்கப்பட்டிருப்பின் மீளாய்வாண்டின்போது வங்கி அறவீடு செய்த ரூபா 5,847,394 மேலதிகப்பற்று வட்டியைக் குறைத்திருக்க இயலும்.

### 2.2.2 இனங்காணப்பட்ட இழப்புகள்

--------------------------------------------------

பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறித்த தினத்திற்கு முன்னர் மின்கட்டணத்தைச் செலுத்தாமையையால் 2010 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின்போது மின்சார சபைக்கு ரூபா 433,672 தண்டப் பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைமை அலுவலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையை 2010 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்குவதற்கு 2009 ஆம் ஆண்டின்போது சிற்றுண்டிச்சாலையை நடாத்திய முகாமையாளரிடமே நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு வாய்மூல அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. இச்சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கான கட்டிடம், நீர், மின்னசாரம் என்பன இலவசமாக வழங்கப்படுவதுடன் சமையல்வாயுவுக்கு மாதாந்தம் ரூபா 35,000 வரை கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டுமிருந்தது. கூட்டுத்தாபனம் வழங்கிய நீர், மின்சாரம் என்பவற்றிற்கு பிறிதாக மின்மானி பொருத்தப்படாமையால் அதற்கான பட்டியலைக் கணக்காய்வில் கணிப்பிடுவதற்கு இயலாது போயிற்று. மேலும், சிற்றுண்டிச்சாலைக் குத்தகையாளருடன் உடன்படிக்கை செய்து கொள்ளாததுடன் 2009, 2010 ஆம் ஆண்டுகளின் பொருட்டு குத்தகை வருமானமெதுவும் அறவிடப்படவுமில்லை.

(இ) 2008 ஜுன் மாதத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையாகிய ரூபா 4,848,276 கூட்டுத்தாபனத்தால் குறித்த தினத்தில் அனுப்பி வைக்கப்படாமையால் ரூபா 1,939,310 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1993 ஏப்ரல் 23 ஆந் திகதிய கூட்டுத்தாபன சபைக் குறிப்பின் பிரகாரம் ரூபா 10 இலட்சம் வரையறுக்கப்பட்ட லங்கா புவத் நிறுவனத்தில முதலீடு செய்யப்பட்டிருந்தது. இத்தொகை 1993 தொடக்கம் முதலீடாக இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டபோதும் முதலீட்டு வருமானம் எதுவுமே பெறப்படவில்லை. முதலீட்டுத் தொகையைத் திருப்பிப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பிரசேத ஒலிபரப்புக் கூடங்கள் மற்றும் பிரதேச சேவைகள் என்பவற்றிற்குச் சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறும் இருந்தன.

| பிரதேச ஒலிபரப்புக் கூடங்கள் /சேவை | | பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறும் இருந்த சொத்துக்களது தன்மை |
|---|---|---|
| (i) | றுகுணு சேவை | அலுவலக நடவடிக்கைகளுக்கும் ஒலிபரப்புக் கூடத்திற்கும் 5000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டிடம் ஒதுக்கப்பட்ட போதும், 2000 சதுர அடி மாத்திரமே பயன்படுத்தப்பட்டடிருந்தது. |
| (ii) | தெனியாய ஒலிபரப்புக் கூடம் | 5000 முதல் 6000 லீட்டர் எரிபொருளைக் களஞ்சியப்படுத்தக்கூடிய எரிபொருள் தாங்கி ஒன்று 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தது. |
| (iii) | கந்துரட்ட சேவை | 19 பர்ச்சஸ் காணியில் அமைந்த அணிவத்த இருமாடி வீடு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படா திருந்தது. |
| (iv) | கொத்மலை சமூக ஒலிபரப்புச் சேவை | தொரகலவில் உள்ள காணி மற்றும் ஏறத்தாழ 4000 சதுர அடியில் அமைந்த வீடு என்பன 8 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தன. |

### 2.2.5 ஆளணிக் கிரயம்

முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம் 30க்கமைய இக்கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 528 ஆகும். (இது கூட்டுத்தாபனத்தால் நிராகரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படவுள்ளது) எனினும், 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 839 ஆகும். பக்கங்களின் அடிப்படை, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 53 ஊழியர்கள் பணியாற்றினர். இவற்றிற்குப் புறம்பாக, விற்பனை நிறைவேற்றுதரத்தைச் சேர்ந்த ஒப்பந்த அடிப்படையிலான 21 ஊழியர்களும் உதவி அறிவிப்பாளராக 77 பேரும் (ஜூன் மாத அடிப்படையில் கொடுப்பனவு/ மணித்தியால மற்றும் நாட்களின் பிரகாரம்) பணியாற்றினர்.

**2.2.6 யாக்கத் திட்டமும் செயல்திட்டமும்**

**(அ) யாக்கத் திட்டம்**

பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடி/12 க்கமைய, யாக்கத் திட்டத்தில் அடங்கும் எதிர்பார்க்கப்பட்ட தேவைகள் அதாவது, கூட்டுத்தாபனத்தில் தற்போது நிலவும் மூல வளங்களது குறிப்பு, நிறுவன வியூகம், கூட்டுத்தாபனத்தின் சக்தியும் நலிவுகளும், சந்தர்ப்பங்களும் சவால்களும் போன்றவற்றின் பகுப்பாய்வு, கடந்த 3 ஆண்டுகளது செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான விமர்சனம் மற்றும் பதவியணியினரின் விபரம் என்பன 2010-2014 ஆண்டுகளுக்கெனத் தயாரிக்கப்பட்ட யாக்கத்திட்டத்தின் மூலம் புலனாகவில்லை.

**(ஆ) செயல் திட்டம்**

அச்சுற்றறிக்கையின் 5.1.2 பிரிவின் பிரகாரம், தெளிவாக இனங்காணப்படும் வித்தில் செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்படவில்லை. மேலும், செய்யவுள்ள பணிகள் தொடர்பாகத் தேவைப்படும் நிதியின் அளவு சில பணிகளைப் பொறுத்தவரை தெளிவாகக் குறிப்பிடப்படாதிருந்தன.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருடாந்த பொருள் மற்றும் கையிருப்புக் கணிப்பு
(ஆ) பணிப் பொறுப்புகளை ஒப்படைத்தல்
(இ) ஒலிபரப்பு அலைவரிசை நேர விற்பனை வருமானத்தை அறவிடுதல்
(ஈ) வரவு, செலவுத் திட்டம்
(உ) ஊக்குவிப்புப் படியை மதிப்பாய்வு செய்யும் முறை
(ஊ) வாகனம்